நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC.No.324/2025

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரவிக்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜீ |
| கிராமம் | : | சேலம், தாதகாப்பட்டி அஞ்சல் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 60 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 25–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.35 PM

1. நான் தற்போது சேலம் சமூக நீதி மற்றும் மனித உரிமையியல் பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த திரு.ஏகாம்பரம் அவர்கள் கொரோனா காலத்தில் இறந்துவிட்டார்.

2. கடந்த 12.11.2021 ம் தேதி காலை 08.30 மணியளவில் மேட்டுர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் அவர்கள் பணியில் இருந்தபோது அவருடன் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சந்திரகுமார் மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மகாலிங்கம், தலைமை காவலர் 789 மதனசேகர், காவலர் 2154 உமாசெல்வம் ஆகியோருடன் மேட்டுர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சேலம் டு மேச்சேரி ரோடு எம்.ஜி,ஆர் பாலம் அருகே குற்றசெயல் தடுப்பு சம்மந்தமாக சென்றபோது TN 93 C 5067 Honda Dio மற்றும் TN 52 B 3292 Hero Honda splendor plus பதிவெண் கொண்ட இரண்டு இருச்சக்கர வாகனத்தில் வந்தவர்கள் வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு நின்றுள்ளார்கள்.

3. அப்போது அடையாளம் மற்றும் பதிவெண் தெரியாத மினி டெம்போவை ஓட்டிவந்த டிரைவர் வண்டி இன்ஜினை ஆப் செய்யாமல் சீக்கிரம் மூட்டையை இறக்குங்கள் என்று சொன்னவுடன் நின்றுக்கொண்டிருந்த இருவரும் டெம்போவில் இருந்து மூட்டையை இறக்கிபோட்டுள்ளார்கள். அதை பார்த்த போலீசார் பிடிக்க முற்பட்டபோது டெம்போ டிரைவர் வண்டியுடன் தப்பி சென்றுவிட்டார்.

4. நின்றுக்கொண்டிருந்த இரண்டு நபர்களை விசாரித்தபோது தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பண்டில்கள் கணக்காக நிறைய வைத்திருந்ததை பிடித்து காலை 08.45 மணிக்கு கைதுசெய்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் போலீஸ் சாட்சி முன்னிலையில் விசாரித்துள்ளனர்.

5. அதில் எதிரி சிவக்குமார் 12.11.2021 ம் தேதி காலை 08.30 மணியளவில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை காலை 09.00 மணிமுதல் 09.30 மணிவரை பதிவுசெய்து ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரிகள் இருவரும் ஆஜர் செய்த மேற்சொன்ன இரண்டு வாகனங்களையும் போலீசார் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளனர். பின்னர் நிலையம் வந்து காலை 10.30 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)( 1. செயின் டொபாக்கோ 19 பண்டில், 2. M–SCNTEO 5 பெட்டிகள், 3. Hans Chaap Tobacco 128 பண்டில் மற்றும் TN 93 C 5067 பதிவெண்**

**கொண்ட Honda Dio இருச்சக்கர வாகனம் அடங்கிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)மேற்படி வழக்கு சொத்துக்கள் அடங்கிய படிவம் 91 ல் உள்ள பொருட்கள் **சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. **(1. Cool lip Tobacco 183 பண்டில்கள், 2. V1 Tobacco 109 பண்டில்கள், 3. விமல் பான் மசாலா 104 பண்டில்கள் மற்றும் TN 52 B 3292 பதிவெண் கொண்ட Hero Splendor plus அடங்கிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி வழக்கு சொத்துக்கள் அடங்கிய படிவம் 91 ல் உள்ள பொருட்கள் **சா.பொ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. **( மேற்படி புகையிலை பொருட்கள் மற்றும் வாகனங்கள் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்து புகையிலை பொருட்கள் காவல் நிலையத்தில் இருந்து எடுத்துவரப்பட்டும் வாகனங்கள் நேரடியாக எதிரிகளால் ஆஜர் செய்யப்பட்டும் சான்றுப்பொருட்களாக குறியீடு செய்யப்பட்டு மீண்டும் அந்தந்த நபர்கள் வசமே ஏற்கனவே பிறப்பித்த உத்தரவின் படி இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது.)**

8. பின்பு சாட்சிகள் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சந்திரகுமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மகாலிங்கம், தலைமை காவலர் மதனசேகர், காவலர் உமாசெல்வம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளார்.எதிரிகள் இருவரையும் தக்க பாராவசம் ஒப்படைத்து கனம் நீதிமன்றத்தில் அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

9. அதன்பிறகு பணிமாறுதலாகி வந்த நான் வழக்கு கோப்பினை தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் செந்தில்குமார், பிரசன்னகுமார் ஆகியோர்களை 21.10.2023 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். காவல் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்களை ஏற்கனவே முதல்கட்ட விசாரணை மேற்கொண்ட திரு.ஏகாம்பரம் அவர்களிடம் சொன்னதுப்போல் என்னிடமும் சொன்னதால் நான் தனியாக அவர்களிடம் வாக்குமூலம் பெறவில்லை.

10. என்னுடைய விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும எதிரிகள் இருவரும் அரசால் தடைசெய்யப்பட்ட ஹான்ஸ் புகையிலை பொருட்களை பெங்களூரில் இருந்து வாங்கி வந்து TN 93 C 5067 பதிவெண் கொண்ட Honda Dio இருச்சக்கர வாகனம் மற்றும் TN 52 B 3292 பதிவெண் கொண்ட Hero Splendor plus ஆகிய இருச்சக்கர வாகனங்களில் விற்பனை செய்தது உண்மையென தெரியவந்தது.

11. மேற்படி புகையிலை உட்கொண்டு யாருக்கும் கண் எரிச்சலோ, வயிற்றுப்போக்கோ மற்றும் உடல் உபாதைகள் எதுவும் ஏற்படவில்லை என நான் விசாரித்த சாட்சிகளாக செந்தில்குமார் மற்றும் பிரசன்ன குமார் ஆகியோர் வாக்குமூலம் கொடுத்தார்கள். எனவே இந்த வழக்கின் சட்டபிரிவை 20(2) COTPA Act r/w 273 IPC ஆக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை 21.10.2023 ம் தேதி தாக்கல் செய்தேன். ( **சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

12. இறுதியாக 21.10.2023 ம் தேதி எதிரிகள் இருவர் மீதும் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 01.05 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**